1216 1216

Regd. No. M. "PEACE" விலை காலணா.

# ஸாந்தி

ஹிந்து - முஸ்லிம் - கிறிஸ்துவ மத ஆராய்ச்சி.

" எப்பொருள் யார்
யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்—மெய்ப்
பொருள் காண்பதறிவு."
(திருக்குறள்.)

ஆசிரியர்:
சுப. முஹமது இஸ்மாயில்.

கௌரவ ஆசிரியர்:
P. பரிமணப் பல்லவராயர்

"சொல்வீராக; மெய்யானது வந்துவிட்டது; பொய்யானது மறைந்துவிட்டது; நிச்சயமாய் பொய்யானது மறைந்துபோகக் கூடியதாயிருக்கிறது."
(குர்ஆன்—17: 81.)

ஆராய்ச்சி 1 | 1935-ஆ ஜூன்-மீ | யுவ-ஆ வைகாசி-மீ ஹிஜ்ரி 1354 ரபியுலவ்வல் | பொருள் 3

OFFICE ... 10 JUN 1935

## கடவுள் இல்லையென்பார்க்கு கனத்தஆப்பு.

### பிடாரிகள் திருவிழா என்பது பெரியவர்கள் விளையாட்டே !

(P. பரிமணப் பல்லவராயர்.)

ஒவ்வொரு வருஷமும் கிராமங்களில அறுவடை முடிந்து, அதசம்பந்தமான போரடி தீர்ந்து முடிந்ததும் ஒரு நாலுமாதம் குடியானவர்களுக்கு ஓய்வு ஏற்படுகிறது. இந்தக் காலங்களிலேயே ஒவ்வொரு ஊரிலும்—நகரங்களிலும்கூடப் பிடாரிகளின் திருவிழா ஆரம்பமாகிறது.

சிறு பிள்ளைகள் தங்களுக்கு வேலையில்லாதபோதோ, விளையாடும்போதோ பல விளையாட்டுக்களை விளையாடுகின்றனர். பெரியவர்கள் தங்கள் ஓய்வு காலங்களில் நடத்தும் திருவிழாக்களையும், சிறுவர்கள் திருவிழா நடத்துவதையும் யாவரும் அறிந்திருப்பர். தைமாதப் பொங்கல் நாளிலே பெரும்பொங்கல், மாட்டுப்பொங்கல் என்பன நடந்து முடிந்ததும், மாடுமேய்க்கும் சிறுவர் கன்னுக்குட்டிப் பொங்கல் என்று நடத்துவதும் நாம் அறிந்ததே.

இந்தமாதிரி, சிறுவர்கள் விளையாடிக்களிப்பது போன்றதே பெரியவர்கள் நடத்தும் பிடாரிகளின் திருவிழா என்றால் பிசகாகாது. இவர்கள் நடத்தும் பிடாரிகளாகிய சாமிகள்—கடவுள்கள் இவர்களுக்கு பல நன்மைகளை—வேண்டியவற்றை அருள் செய்வதாகவே—கொடுத்து உதவுவதாகவே இவர்களுடைய ஐதீகம்—கொள்கை-நம்பிக்கை.

இவர்களுடைய ஐதீகப்படி—கொள்கைப்படி—நம்பிக்கைப்படி இந்தச் சாமிகள்-பிடாரிகள் இவர்களுக்கு அருள் செய்கின்றனவா? என்றால் அதுதான் இல்லை. இல்லையென்று இலேசாய்ச் சொல்லுவதல்ல. வலியுறுத்திச் சொல்லுவதாகும்.

"ஒரு கூடை செங்கல்லும் பிடாரிதானே" என்பதும் ஒரு பழமொழி. ஆகவே, பிடாரியென்பதோடு, மாரிகளும், காளிகளும், சிவன் முதலிய ஆண்சாமிகளும் இந்தக் கட்டுரைக் குறிப்பின் கருத்தில் அடங்குவதாகும்.

எத்தனையோ ஊர்களிலுள்ள ஆண் பெண்சாமிகளின் நகைகளும் தாலிகளுங்கூடத் திருட்டுப்போய்விடுகின்றன. இந்தத்திருட்டுகளை இந்தச் சாமிகளால் தடுக்கமுடியவில்லை. தன் பொருளைத்தன்னால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. பிறரை-தன் பக்தர்களை-ஜனங்களை எங்கு காப்பாற்றப்போகின்றது ?

திருவெறும்பியூர் சைவசமய ஆச்சாரிகளால் புகழ்ந்து பாடப்பெற்றது. எறும்புகளுக்கு முக்தியளித்த எறும்பீச்சுரன் என்ற பெயரும் உண்டு. சமீபத்திலே சில வருஷங்களுக்கு முன்னே ஏற்பட்ட வெள்ளத்தினால் இந்தக் கோவிலின்-சாமிக்குச்சொந்தமான நிலங்கள் மண்ணடித்துப் போயிற்று. 4, 5-காலப் பூஜையும், சுக்கு மிளகு கஷாய பூஜையும், படுக்கையறைசெல்லலுமாயிருந்தசெய்கை

இந்த வெள்ளத்தின் கெடுதியினால் ஒரு காலபூஜைக்கும் கஷ்டமாய்ப் போயிற்று. திருவிழாவின்போது 10, 12, தாசிகளால் கோலாட்டம் கும்மிகள் நடந்த சீரும் சிறப்பும் இப்போது,

“ உள்ளேயிருக்கிற சாமி உண்டை
சோத்துக் கழுகிறதாம்.
வெளியேயிருக்கிறதெல்லாம்
தீத்தியான்னம் தீத்தியான்னம்
என்கிறதாம்.”

என்பதுபோல நேர்ந்துவிட்டது.

லால்குடி தாலூகா தாழக்குடியிலிருக்கிற சாமிகளின் பேரால் இருந்த-இருந்துவருகிற நிலத்தை ஒருசிலர் சொந்தமாக அனுபவிக்க ஹைக்கோர்ட்டு வரையில்சென்றும் விமோசனம் இல்லாமல் போயிற்று. பெரிய கோயில் என்றழைக்கப்படும் ஸ்ரீரெங்கத்தின் ரெங்கநாதசாமியின் வருகைக்கு தாழக்குடியில் இடஞ்சலாயிருந்த ஒரு இடமும் ஹைகோர்ட்டு வரைக்கும் போயுங்கூட விமோசனமில்லாமல் போயிற்று. அன்றியும், ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழிந்து போயிற்று.

பொன்மலை மேலக்கல்கண்டார் கோட்டையின் பிடாரிக்குச் சொந்தமான நிலத்துக்கு மழையில்லாமல் நிலம் சாவியாய்ப்போய் ஒன்றும் விளையாமல் போய்விட்டது. இச்சாமியின் கோயிலுக்குக்கட்டிய முன்மண்டபச்செலவும், இதன் கும்பாபிஷேகச்செலவும் இன்றும் கடனிலேயே இருந்து வருகிறது. கடன்வாங்கக் கையெழுத்துப்போட்டோரில் சிலர் வருத்தப்படாமலுமில்லை.

இம்மாதிரி எத்தனையோ ஊர்களின் அநுபவங்களை இங்கு எடுத்துக்காட்டலாம். இப்பத்திரிகை அளவுக்கு இடமளிப்பது கஷ்டம்—முடியாத காரியம்.

இப்படி சாமிகளால் தங்கள் காரியங்களையே—சௌகரியங்களையே—சொத்துக்களையே காப்பாற்றிக் கொள்ளமுடியாதபோது மனிதர்களைக் காப்பாற்றுவது எங்ஙனம்?—எப்படி முடியும்? இந்தச்சாமிகள் ஜனங்களைக் காப்பாற்றுகிறது என்கிறவையெல்லாம் முழுப்புரட்டு——பொய்—மோசம்—ஏமாற்று என்றே திண்ணமாய்ச் சொல்லலாம். பகுத்தறிவை உபயோகித்துப்பார்ப்போருக்கு இவ்வுண்மை இலேசில் விளங்கக் கூடும். மற்றையோரெல்லாம் “தான் பிடித்த முயலுக்குமூன்றே கால்” என்று சாதிக்கிற—பாமரத்தன்மை —அறியாமையேயன்றி வேறன்று.

“யதார்த்த வாதீ வேதுஜன விரோதீ” என்பது பழமொழியல்லவா!

ஆகவே, நாம் சொல்வதெல்லாம் நாஸ்திகமாகவே பிடிவாதக்காரர்களுக்குத்தோன்றும். இவர்கள் சிறுபிள்ளைகளைப்போல் குழந்தைத்தன்மை—விளையாட்டுத்தன்மை உடையவர்கள் எனலாம். அல்லது சாமிப் பயித்தியம் பிடித்தவர்கள் என்பது நிச்சயம். சாமி என்பது என்ன என்றே இவர்கள் அறியாதவர்களாகும். இதன் அர்த்தம் என்ன என்பதைப்பற்றி அடுத்த தடவை விரிவாக விளக்குவோம்.

இதனால் நாம் நாஸ்திகனென்றே எவரும் இயம்புவர்.

“ நட்டகல்லைத் தெய்வமென்று
நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று
சொல்லு மந்த்ரமேதடா
நட்டகல்லும் பேசுமோ
நாதன் உள் இருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை
அறியுமோ?”

என்று சிவவாக்கியசித்தர் திருவாய் மலந்தருளி உள்ளாரே! இவர் நாஸ்திகரா? அல்ல, அல்ல, அல்லவே அல்ல. இவர் என்ன சொல்லுகிறார்? கடவுள் (நாதன்) ஒவ்வோருவருடைய உள்ளத்திலும் இருக்கிறார் என்கிறார். வசிஷ்டர் இராமருக்கு உபதேசித்ததும் இதுவே. இவர்களெல்லாம் நாஸ்திகரா? “கடவுள் கடவுளெனக் காசைத் தொலைக்காதே” என்றார்கள் பல அறிவாளிகள். இன்றுங்கூட கிராமங்களில் சில வயது அதிகமான பெரியவர்கள் என்போர் பல வேதாந்த நூல்களைப் பாடல்களாக உள்ளனவற்றைப்படிப்பர், படித்துப் பலருக்கும் அர்த்தம் சொல்வர்-உபதேசிப்பர். இவர்களின் நடத்தை யாவது இவர்கள் படித்தமாதிரியும் பிறருக்குச்சொன்ன--உபதேசித்தமாதிரியும் இருக்குமா? எட்டளவில் தான்! எட்டுச் சுரைக்காய் கறிக்காதுமா? என்பதை இவர்கள் எண்ணுவதே இல்லை. இப்படியே நம் மக்கள் பாமரத்தன்மையிலேயே இருக்கக் கூடுமாகில் “ ஊரார் ஊட்டு நெய்யே என் பெண்டாண்டி கையே” என்றபடி ஊர் ஜனங்களின் காசைத் திருவிழா திருவிழா என்று பிடுங்கிச் செலவுசெய்து விளையாடிவிட்டுப் போனால் யாருக்கு என்ன நன்மை உண்டாகிறது?

நாம் இதுவரை கூறிவந்தது நாஸ்திகமென்று எவரேனும் சொல்வார்களானால் அடுப்பங்கரையிலும் மூலை முடுக்குகளிலும் மொணமொணக்க வேண்டாம். பகிரங்கமாக எழுத்து மூலம் எழுதி வெளியிடட்டும் அப்படிப்பட்ட கனத்தஆப்பை நாம்நல்வரவேற்கின்றோம். நாம் சொல்லுவது சரியென்று தோன்றினால் நம் அபிப்பிராயத்தை ஆதரித்து, பாமரத்தன்மையை அறிவீனத்திலிருந்து அகற்றும் ஆற்றலை அறிவித்து நமக்கு—நம் ஜனங்களின் நன்மைக்கு ஊக்கமூட்டட்டும். பெருந்துணை புரியட்டும். அப்படியுமின்றி இப்படியுமின்றி நடுநிலைமையிலிருப்பதென்பது, “ அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல் ” என்று படித்ததற்கு அழகாகாது. திண்ணை வேதாந்தம்பேசுவதால் பயனில்லை. அத்தனையும் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்க்கும், தன் ஊருக்கும், தன் தேசத்துக்கும் அனர்த்தமேயன்றி வேறல்லவென்பதைத் திண்ணமாய்ச் சொல்லலாம்.

———

இஸ்லாத்தை ஒழிக்க முடிவு. புத்தகம் 0-2-0.
“ஸாந்தி” ஆபீஸ்,
பொன்மலை, திருச்சி.

# முஸ்லிம் முல்லாக்கள்

## புரோகிதர்கள் மானமற்றவர்கள்.

(By M. M. D., தீ எங்முஸ்லிம் ஸ்டார் அஸோஸியேஷன் விஜயபுரம்.)

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

புரோகிதர்கள் பொய்சொல்வதைப் புனிதமெனக் கருதுவார்கள். அக்கிரமம் என்பதற்கு அவர்கள் அகராதியில் அன்பு என்று பொருள். யாசகம் செய்வது புருட லட்சணங்களில் ஒன்று என்பது அவர்கள் அபிப்பிராயம். பிறர் வாழ்வதைக்கண்டு ஒருக்காலும் அவர்கள் சகியார்கள். தங்கள் இரண்டுகண்கள் அவிந்துபோனாலும் அதைப்பற்றி கவலைப்படமாட்டார்கள்; எதிரியின் ஒருகண் அவிந்துபோனால் அதுவே அவர்களுக்கு பிரமானந்தம். மதசம்பந்தமான விஷயங்களில் தங்களது தீர்ப்பே முடிவானது என்று அடஞ்செய்வார்கள். ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி அவர்கள் அறியாதிருப்பினும், அது தெரிந்ததாகவே பாசாங்கு செய்வார்கள். வேதவாக்கியங்களைத்தங்களுக்குச் சாதகமாகவும் சமயத்திற்குத் தகுந்தாற்போலும் வியாக்கியானம் செய்வார்கள். பொருள் பறிக்கும் ஒன்றைத்தவிர ஒரு குறிப்பிட்ட கொள்கை எந்தக்காலத்திலும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் வர்க்கத்தினரைச்சேரா எல்லோரையும் தங்கள் பாத தூசி என மனப்பால் குடித்துக்கொண்டிருப்பார்கள். சொற்கலோகத்திற்குத் தங்களிடத்தில்தான் பாஸ்போர்ட் இருப்பதாகப் பறைசாற்றுவார்கள். தங்களிடத்தில் முரீது அல்லது தீட்சை பெறாதவர்களெல்லாம் அறிவிலிகள் என்பது அவர்கள் அந்தரங்கமான எண்ணம். அவர்கள் கொள்கைகளுக்கு இசைந்துவராத எவரையும் காபிர், அஞ்ஞானி, அல்லது நீசன் என நாவில் நரம்பில்லாததுபோல் கூறுவார்கள். மானம், லட்சியம் ஆகிய எல்லாவற்றையும் வயிற்றுப்பிழைப்பிற்காக விற்றுவிடுவார்கள்.

இறைவனிடத்திலும், இறந்தவர்களின் ஆவிகளிடத்திலும் சில சமயங்களில் பேசிக்கொண்டிருப்பதாகவும் கூறுவார்கள். சன்மார்க்கத்திற்கு முரணிய விஷயங்களுக்கெல்லாம் மறைமுகமாகவும், பகிரங்கமாகவும், ஆதரவளிப்பார்கள். அச்செயல்களை அறிஞர்கண்டிப்பரேல், அவர்கள்மீது வசைமாரி பொழிவார்கள். தங்கள் வயிற்றுப்பிழைப்பு ஒன்றேதான் அவர்களுக்கு முக்கியமான லட்சியம். அதற்காகத் தம் அருமந்தன்ன ஆப்த நண்பர்களையும் காட்டிக்கொடுத்துவிடுவார்கள். சுயநலத்திற்கு அவர்களே இருப்பிடம். பொறாமைஇன்னதென்பதைப் பொதுமக்கள் அவர்களிடமிருந்துதான் கற்றுக்கொள்ளவேண்டும். கல்வியைக்கண்டால் அவர்களுக்குக் கசப்புத்தோன்றும். அறிவு அவர்கள் சரிதையில் அருவருக்கத்தக்கதோர் வஸ்து. பலாத்காரம் அவர்கள் உடன் பிறந்த வியாதி. பயங்கொள்ளித்தனமும், பேடித்தனமும் அவர்களே. மூடமக்களைத் தூண்டிவிட்டுவிட்டு அவர்கள் மண்டைகள் உடைந்துகொண்டிருக்கையில் இவர்கள் தங்கள்மனைவிகளுடன் சுகானந்தமனுபவித்துக்கொண்டிருப்பார்கள். அபிப்பிராய பேதங்களுக்காக மக்களைச் சித்திரவதை செய்வதில் அவர்களுக்கு ஆனந்தம் அதிகம். கொடுமைக்கும், கோரத்திற்கும், அவர்களுக்கும் நெருங்கியஉறவுண்டு. அதிகம் கூறுவானேன்.? தங்களின் சுயநலத்திற்காகப் பஞ்சமா பாதகங்களைச்செய்வதற்கு எப்பொழுதும் தயாராக இருப்பார்கள்.

குறிப்பு:-(விஜயபுரம் புரோகிதர்களின் அட்டூழியங்களைப்பற்றி கிடைத்த விஷயங்களைப்பின்னர் வெளியிடப்படும். ப-ர்)

"ஸாந்தி"

விளம்பர விகிதம்.

ஒரு தடவைக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்துக்கு | ரூ. 5 | 0 | 0 |
| ½ ,, | ரூ. 3 | 0 | 0 |
| ¼ ,, | ரூ. 2 | 0 | 0 |

நீண்டகால விளம்பரத்திற்குக் குறைந்த சார்ஜ் செய்யப்படும் எழுதி கேட்டுக்கொள்க. மானேஜர்,

"ஸாந்தி" ஆபீஸ்,
பொன்மலை, திருச்சி.

வந்துவிட்டது 'குலாம்' இயற்றிய நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பள்ளு பறையர் … | 0 | 1 | 0 |
| 2. | இஸ்லாத்தை ஒழிக்க முடிவு | 0 | 2 | 0 |
| 3. | பாரத குமாரி … | 0 | 8 | 0 |
| 4. | கைந்நாட்டு அரபி … | 0 | 4 | 0 |
| 5. | ஸோஷலிஸ கர்த்தா யார்? | 0 | 4 | 0 |
| 6. | மங்களநாதன் அல்லது மாயமங்கை (P பரிமணப் பல்லவராயர்.) | 0 | 1 | 0 |
| 7. | ஸன்மார்க்க இஸ்லாம் (லீடர்) | 0 | 2 | 0 |

இந்த ஏழு புத்தகங்களையும் ஒரே தடவையில் பெற விரும்புபவர்களுக்கு தபால் செலவு இனாம்.

கிடைக்குமிடம்:— "ஸாந்தி" ஆபீஸ்,
பொன்மலை, திருச்சி.

"மேலும் அருளாளனுடைய அடியார்களாயிருப்பவர்கள் தரணியின் மீது ஸாந்தகுணத்துடனேயே நடப்பவர்களாயிருக்கின்றார்கள்." (குர் ஆன்)

# 'ஸாந்தி'

1935 ஜூன்-மீ 1935.

நம் பத்திரிகைக்கு "ஸாந்தி" என்ற பெயர் ஏற்பட்டதின் நோக்கமென்ன? நம் இஸ்லாமானவர்களும் சரி, கிறிஸ்துவர்களும் சரி, ஹிந்துக்களும் சரி யாவரும் ஏக சகோதரத்துவத்தை அடைந்து, ஒற்றுமையுடன் நிலவி உலகம் போற்ற உய்யவேண்டும் என்பதேயாகும். மேலும், நம் இஸ்லாமான சகோதரர்கள், தமது இஸ்லாம் என்ற நாமதேயத்துக்கு உள்ள உண்மையான பொருள் "ஸாந்தி" என்பதை உணர்ந்திருப்பார்கள் என்று நாம் நம்ப முடியவில்லை. சிலர் அறிந்திருப்பார்களேயன்றி, பெரும்பாலோர் அறியாதிருக்கின்றன ரென்றே நம் மதத்தினரின் பெரும் பாலாருடைய செய்கைகளாயிருக்கின்றதென்று எவரும் இயம்ப இடம்கொடுக்கக் கூடியதாயிருக்கின்றது.

நமது உருது பாலபாடபுத்தகத்திலே நமது பாலர்களுக்கு இளமையிலேயே நம்பெரியார்கள்,

"அல்லாஹூ மேஹர்பானி
தேக்கோ,
உனே ஹம்கு பைதா
க்கியாஹை"

("ஆண்டவன் நம்மைப்
படைத்தான்,
அவருடைய அன்பைப்
பாருங்கள் !)

என்று போதிக்குமாறு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அந்நூலாசிரியருக்கு நமது அநேக வந்தனம் உரியதாகுக. ஆனால், பாலரைவிடப் பருவத்தில் மிகுந்தவரான நம் இஸ்லாம் சகோதரர்களிற் சிலர் போதனைக்கு விரோதமாக நடந்துகொள்வது மிகவும் வருத்தமாயிருக்கின்றது.

நமது "ஸாந்தி" யின் முந்திய துண்டு வெளியீடுகளைக்கண்ட நம் இஸ்லாம் சகோதரர்களிற் சிலர் மிக மிக ஆத்திரமாகப் பேசியதையும் திட்டியதையும் நாமே அறிந்தோம். அறிந்து என் செய்வது? நாம் அச்சமயம் நம்மை இன்னாரென்றுஅறிவித்திருப்போமாயின் நாமே நன்கு அடிபட்டிருப்போம். பத்திரிகைகளை விற்கும் கடைக்காரர்களையும், பையன்களையும் சண்டை போட்டிருக்கின்றனர். விஷய விளம்பரங்களைக் கிழித்தெறிந்திருக்கின்றனர்.

அந்தோ! இதுதானா 'இஸ்லாம்' என்பதன் பொருள்! இதுதானா அன்புக்கு அடையாளம்! நம் சகோதரர்களிடையே "இஸ்லாம்" என்ற "ஸாந்தி"க்கு உரிய சாந்த குணம் தென்படவில்லையே! இதனை எந்தக்காலத்தில் நம் இஸ்லாம் சகோதரர் அனைவரும் அடையப் போகின்றனர்? 'இஸ்லாம்' என்ற மதப்பெயரின் தத்துவத்தை-ஞானத்தைப் பெறப் போகின்றனர்? அந்தக்காலந்தான் நம் 'இஸ்லாம்' மதத்தின் உயர்ந்த தத்துவத்தை உலகமுழுவதும் உள்ளோர் அறிந்து போற்றும் காலம்- அநுசரிக்கும் காலம்-ஏக சகோதரத்துவம் உண்டாகும் காலம் எனலாம்.

ஆகவே, நம் இஸ்லாம் சகோதரர்கள் எதையும் ஆய்ந்தோய்ந்து பாராமல் அவசரப்பட்டு மனப்பதஷ்டமாய் எதுவும் செய்துவிடாமல், இளமையில் நாம்ஆத்திசூடியில் "தூக்கி வினைச்செய்" என்று படித்தபடி எதையும் ஆராய்ந்து நிதானித்துச்செய்து, துருக்கர்—துலுக்கர், துட்டர்-துஷ்டர் என்ற பெயர்—"துட்டுக்கொரு குட்டி ஆனாலும் துலுக்கக் குட்டி ஆகாது" என்று வழங்கும் கெட்டபெயரை அகற்றுவதற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுதல் பெரிதும் சாலச்சிறந்ததாகும்என்பதைவற்புறுத்த விரும்புகிறோம்.

* * *

## மதிப்புரை.

### ஸோஷலிஸ கர்த்தா யார்?
### மார்க்ஸா? அல்லது முஹம்மதா?

இந்நூல் தோழர் குலாம் அவர்கள் இயற்றியது. இந்நூலில், ஸோஷலிஸம் அல்லது சமதர்மம் என்றால் என்ன? இதன் அடிப்படையான கொள்கைகள் என்ன? இதனைக்காரல் மார்க்ஸ் என்பார்தான் முதன் முதலில் உலகினர்க்கு ஊட்டினாரா? அல்லது அக்கொள்கை அவருக்கு முன்னாலேயே இருந்தவர்களால் உலகினர்க்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளதா? இக்கொள்கையின் அடிப்படையான தத்துவம் என்ன? என்பனவாகிய விவரங்களை மிகத்தெளிவாகவும், சுருக்கமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் கற்றோரும் மற்றோரும் எளிதிலுணருமாறு காரண காரியங்களுடன் விளக்கிக்காட்டியுள்ளார். இப்புத்தகத்தின் விலை நான்கே அணாதான். வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

'ராஜரசம்' கம்பெனி,
பொன்மலை, திருச்சி.

* * *

### "வர்த்தக ஊழியன்"

இது வர்த்தக முன்னேற்றங்கருதி சிலாகிக்கத்தக்க முறையில் ஆங்கிலத்திலும், தமிழிலுமாக மாதமொரு முறை வெளிவரும் சிறந்த பத்திரிகை. யாவரும் வாங்கி வாசித்துப் பயன்பெறத்தக்கது. வருட சந்தா ரூபாய் ஒன்றே. வெளிநாட்டுக்கு ரூ. 1 8 0. பெரியகடைத்தெரு "வர்த்தக ஊழியன்" ஆபீஸுக்கு எழுதிக்கொள்க.

# குடிகார முஸ்லிம்கள் கவனிப்பார்களா?

(S. B. M. இஸ்மாயில்)

—oo—

குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்புகளாய்த் திகழும் ஏ! குடிகெட்ட குடிகார முஸ்லிம்காள்! நீங்கள் சற்று உங்களைத்தானே பரிசோதித்துப்பாருங்கள். நீங்கள் எதைப் பின்பற்றியவர்களாயிருக்கின்றீர்கள். இஸ்லாத்தைத்தான் நாங்கள் பின்பற்றுபவர்களாய் இருக்கின்றோம். அதனால்தான் நாங்கள் முஸ்லிம்களென அழைக்கப்படுகின்றோம். முஹம்மதுவை எப்படி முஸ்லிம்களின் தலைவராகக் கொள்ளுகிறார்களோ அப்படியே நாங்களும் முஹம்மத் நபியாரை எங்கள் தலைவராக நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். ஆகையால் நாங்கள் முஸ்லிம்கள்தான் எங்களை முஸ்லிம்களாகத்தான் பாவிக்கவேண்டும் - முஸ்லிம்களாகத்தான் ஏனையோர் இன்றைக்கும் பாவித்து வருகின்றார்கள் என்று நீங்கள் பறை சாற்றுவீர்களாகில், உங்கள் போன்றோர்களைக்கண்டு எம்மதத்தினர்தான் நகையாடமாட்டார்கள்? அந்தோ! உங்களால் முஸ்லிம்கள் வெட்கப்படும் காலம் தூரத்திலில்லை. உங்களைக்கண்டு முஸ்லிம்கள் குறைகூறுவதில் யாதுபலனுண்டு. இஸ்லாத்தின் தூண்களென்றும், வாரிஸ்தார்களென்றும், இஸ்லாத்தை அப்படியே பாதுகாப்பவர்களென்றும் இன்னும் அநேகவிதமாய்ச் சொல்லிக்கொண்டு உலமா, மௌல்வி, ஆலீம், ஹஜ்ரத், மௌலானா இது போன்ற அநேக படாப்டா பட்டப் பெயர்கள் தாங்கி மௌடீகத்தை வளர்த்து, சோம்பித்திரிந்து, வயிறு வளர்க்கும் வைதீகப்பிராணிகளாகிய முல்லாக்கள்தான் குடிக்கும், இது போன்றவைகளுக்கும் வழிகாட்டியாய் இருக்கின்றார்கள் என்று சொல்வதில் யாருக்குதான் சந்தேகம் ஜனிக்கக்கூடும்? (மறுப்பவர்கள் மறுக்கட்டும். அதற்கு இந்த ஸாந்தி பத்திரிகை மூலம் பதிலளிப்போம்.) இன்னவர்களைக்கொண்டுதான் முஸ்லிம்கள் ‘துட்டுக்கோர் குட்டியானாலும் துலுக்கக்குட்டி யாகாது,’ துஷ்டர், துடுக்கர், முரடர், மூடர் என்றெல்லாம் பிறமதத்தினர்களால் அழைக்கப்படுகின்றனர்.

### ஏன்? எப்படி?

முஸ்லிம்களுக்கு உண்மையான உபதேசங்களை எடுத்துக்காண்பிக்காததினாலேயேதான் அப்படி அழைக்கப்படுகின்றார்கள். இதற்குக் காரணம், மேலே சொல்லிவந்த வைதீக சுயநல முல்லாக்களேயாவார்கள். ஏனென்றால், இம்முல்லாக்கள் தங்கள் சுயநலங்கருதி குர்-ஆனையும், தீர்க்கதரிசி முஹம்மது (ஸல்)வின் உபதேசங்களையும் விட்டு வெகுதூரம் சென்று அவர் சொன்னார், இவர் சொன்னார், அந்த மௌலானா இப்படி நடந்து காட்டினார், இந்த மௌலானா அப்படி நடந்து காட்டினார் என்று கண்டதையும் கடையதையும் சொல்லி இப்படியே ஒவ்வொரு முஸ்லிமும் நடந்துகொள்ளவேண்டும். இதே இஸ்லாம். இதையாரும் மறுக்கக்கூடாது. அப்படி மறுப்பவர்கள் காபிர்களாவார்கள் என்றெல்லாம் முஸ்லிம்களிடையில் கற்பித்துக் காட்டியதாகும். ஆகையால் இப்பொழுது நாம்

### என்ன செய்ய வேண்டும்?

முஸ்லிம்களாகிய நாம் எதற்கும் குர்-ஆனையும், நபியார் உண்மை உபதேசங்களையும் எதற்கும் ஆதாரமாகக் கொள்ளப்படவேண்டும். ஒவ்வொரு முஸ்லீம் இளைஞர்களும் இஸ்லாத்தின் உண்மைப் பாதுகாவலராய் விளங்கவேண்டும். இஃதே நமது தலைவராம் முஹம்மதின் (ஸல்) முக்கியதோர் உபதேசமாகும். இதைக் கடைப்பிடித்தே துருக்கி கமாலும் தம் பிரசங்கங்களில், இஸ்லாம் இளைஞர்களுடையது, இஸ்லாத்தின் பாதுகாப்பாளர்கள் இளைஞர்களே, இவர்களைக்கொண்டே இஸ்லாம் அபிவிருத்தியடையவேண்டும். முல்லாக்கள் போன்றோர்களை மூலையில்இருத்தவேண்டும், இல்லையானால் அவர்களைத்தொலைத்துத் தலைமுழுகவேண்டும் என்றெல்லாம் பறை சாற்றிவருவது கண்கூடு.

இளந்தோழர்களே! விழிமின்! எழுமின்! உழைமின்! எதுவானாலும் முல்லாக்களைஎதிர்பார்க்கவேண்டாம். எதற்கும் தலைவராம் முஹம்மது(ஸல்)வை வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும். அபபொழுதுதான் இஸ்லாம் தூய்மையான சுத்த சத்திய இஸ்லாமாய்த் திகழும். அப்பொழுதான் முஸ்லிம்கள் குடியைத்தொலைத்து தலைமுழுகுவார்கள். அப்போதுதான் எங்கும் ஸாந்தீ—சமாதானம் நிலைக்கும். அப்போதுதான் துடுக்கர், துஷ்டர் என்பதெல்லாம் காற்றாய்ப் பறக்கும் என்பதை ஞாபகத்திலிருத்தி உண்மை- பரிசுத்த முஸ்லிம்களாகத்திகழ -விளங்கவேண்டுகின்றோம்.

“முஸ்லிம்களில் குடிக்கு வழிகாட்டி வைதீக முல்லாக்களே” என்பதை அடுத்த ‘ஸாந்தி’ இதழில் இன்ஷா அல்லா எடுத்துக்காட்டுவோம்.

* * *

“ மநுதர்மம் ”

இது பொதுஜன சீர்த்திருத்தங் கருதி தமிழில் வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகையாகும். சமத்துவம், சகோதரத்துவம், சுயாதீனம் ஆகியவைகளை அடிம்படையாகக்கொண்டு வெளிவருவது. உள்நாட்டுக்கு ரூ. 1 4 0. வெளிநாட்டுக்கு ரூ. 2 0 0. ஹரிஜனங்கள் என்னும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு ரூ. 1 0 0. கொடுமுடி (P. O. & S. I. R.) மநுதர்மம் ஆபீஸுக்கு எழுதிக்கொள்க.

‘ ராஜரசம் ’

(கல்கத்தா ரிஜிஸ்டர்.)

ரசங்களுக்கெல்லாம் ராஜன்!
மருந்துகளுக்கெல்லாம் மன்னன்!
வியாதிகளை விரட்டும் வில் விஜயன்!

புட்டி 1க்கு ரூ. 1—8—0.
(தபால் சார்ஜ் வேறு.)

ராஜரசம் கம்பெனி,
பொன்மலை, திருச்சி.

# முஸ்லிம்களிடையில் தீண்டாமையும்

## ஜாதிமத பேதமும் இல்லையா?

ஹிந்துக்களுடைய மதத்தில் இருக்கும் தீண்டாமைப்பழக்கத்தைக் கண்டு முஸ்லிம்கள் கண்ட கண்டவிதமெல்லாம் ஹிந்துக்களையும் ஹிந்து மதத்தையும் இகழ்கின்றார்கள். ஹிந்துக்கள் தங்கள் மதத்தினரில் ஒரு சிலரைத் தங்கள் கோவில்களுக்குள் நுழையவோ, தங்கள் தெய்வங்களைத் தரிசித்து ஆதரிக்கவோ விடுவதில்லை. இது மூடப்பழக்கமென்றும், ஜாதி இருமாப்பென்றும், இதனால் ஹிந்துமதம் க்ஷீணித்துவருகின்றதென்றும், இன்னும் என்னென்ன விதமாகவோவெல்லாம் ஹிந்துக்களையும், ஹிந்து மதத்தையும் இழிவுபடுத்திக்கூறவோ அவையனைத்தையுங் கொண்டு தூற்றிப்பெருமையடித்துக் கொள்ளுகின்றனர்.

இதேபோல் கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவ மதத்தையும் முஸ்லிம்கள் இழிவாகக் கருதுகின்றனர். கிறிஸ்தவக்கோவில்களில் எல்லா ஜாதிக் கிறிஸ்தவர்களும் நுழைந்து பிரார்த்தனை செய்யமுடியாது. நுழைந்தால் சிலவிடங்களில் மண்டை உடைந்து விடுகின்றது. ஹிந்துக்களிடமிருப்பதேபோல் இவர்களிடையில் சமபந்திபோஜனம் கிடையாது; கலப்புமணம் கிடையாது. எல்லாம அந்தந்த ஜாதியாருக்குள்ளேதான் ஆகவேணடும். இதை எடுத்துக்காட்டி முஸ்லிம்கள் கிறிஸ்தவாகளை இழிவுபடுத்திக் கூறி வருகினறனர்.

### ஆனால்

தங்கள் கண்களை முஸ்லிம்கள் கண்ணாடி முன் நின்று பார்ப்பதில்லை; பார்க்கப் பிரியப்படுவதில்லை. ஆனதால் முஸ்லிம்கள் தாங்கள் பிரியப்படாவிட்டாலும் அவர்களின் முன்னிலையில் இந்த நிலைக்கண்ணாடியை வைக்கின்றோம். அப்பொழுதாவது அவர்கள் அதைப்பார்த்து உண்மைத்தோற்றம் என்னவென்பதைத் தெரிந்துகொண்டு, தங்களைத் திருத்திக்கொள்ளட்டும். இதரர்களை இழிவுபடுத்திக் கூறுவதையாவது நிறுத்திக்கொள்ளட்டும்.

**சுன்னிகளுக்கு காதியானி பள்ளன்.**

இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் முஸ்லிம்கள். இவர்களிடையில் பல ஜாதிகளும், பிரிவினைகளும் உண்டு. ஆராய்ச்சிக்காரர்கள் 200-க்கு மேற்பட்ட ஜாதிகள் இவர்களிடையில் இருப்பதாகக் கணக்கெடுத்துக்கூறுகின்றனர். இவர்களின் பிரிவுகள் ஹிந்துக்களில் உள்ளதேபோல் 4 பிரதானமான பிரிவுகள் இருக்கின்றன. சுன்னத் ஜமாத் என்னும் பிரிவு எண்ணிக்கையில் நிறைந்தது. இவர்களை ஹிந்து பிராமணப்பிரிவுக்கு ஒப்பிடலாம். இவர்களுக்கு ஆச்சாரிகளாக விளங்கும் உலமாக்களும் புரோகிதர்களும் சொல்லுவதேதான் இவர்களுக்கு வேதவாக்கு இவர்கள் வணங்குவதும் இந்த மௌலானாக்களையேதான். அல்லா(ஹ்)வை வணங்குவது இரண்டாவதாகத்தான். இவர்கள் பின்பற்றுவது ஒன்றுமில்லை. தாடிவைப்பதும் மௌலானாவைப் பின்பற்றியேயன்றி முஹம்மதைப்பின்பற்றியல்ல. முஹம்மதைப்பின்பற்றுவதானால் நூற்றுக் கணக்கானவிதமாய் தாடிகள் காணப்பட இடமில்லை. மௌலானா ஒரு அங்குல தாடி வைத்தார் என்றால் அதுதான் சரி. ஒரு சீர்திருத்த சங்க ஆபீஸில் 3 மௌலானாக்கள் இருக்கின்றனர். பிரதம மௌலானா படர்ந்த தாடியை வைத்திருக்கின்றார். அடுத்தபடியிலுள்ள மௌலவிசாஹிப் தன் தாடியைக் கீழ்நோக்கி வளரவிடாமல் வாராவாரம் அதைக் கத்தரித்து $\frac{1}{2}$ அங்குலத்துக்குள்ளேயேதான் நிறுத்திவிடுகின்றார். மற்றோர் ஹஜ்ரத் முகத்தின் பக்கங்களைக்காலி செய்துவிட்டு வாய்க்குக் கீழேயுள்ள மோவாய்க்கட்டையில் மட்டும் $\frac{1}{8}$ அங்குலமயிரை வைத்துக்கொள்கின்றார். இவர்கள் அனைவரும் சேர்ந்து தாடி வைக்காத முஸ்லிம்களைக்கண்டு இகழ்வார்கள். முன்னெடுத்துக்காட்டிய 3 வகைத்தாடிக்காரர்களும் முஹம்மதைப்பின்பற்றுவார்களானால் அவர் வைத்திருந்தமுறையில் தாடி வைத்திருக்கவேண்டும். அதை விடுத்து முஹம்மதைஎமாற்றிவிடலாமென்று அவர்கள் பின்பற்றிய மௌலானாக்களை ஒட்டியே தாடி வைக்கின்றார்கள். தாடியைப்பற்றி முஹம்மது கவலைப்படவில்லை. "தாடி மறைத்துக்கொண்டு நிற்கும் நெஞ்சின்கீழ் உள்ள மனது எப்படி இருக்கின்றது என்றுதான் அல்லா(ஹ்) ஒவ்வொருவரையும் பார்க்கின்றார்" என்று உணர்ந்த முஸ்லிம் தாடிக்காரர்களால் இகழப்படுகின்றான். குடிகாரக்கூத்திக்கள்ளனும் கொலைபாதகனுமாயிருந்தாலும் அவன் பூணூல் போட்டிருந்தால் பிராமண ஜாதியான் என்று கௌரவிக்கப்படுவதேபோல், தாடி வைத்தவரெல்லாம் முஹம்மதைப் பின்பற்றுவதாகக் கொள்ளப்படுகின்றது. இது கிடக்கட்டும். இதைப் போன்ற உதாரணங்கள் எடுத்துக் காட்ட எண்ணிறந்தவை உள்ளன; இதைப்பற்றிப் பின்னர் வெளியிடுவாம்.

இதுபோல் மௌலானாக்களைப் பின்பற்றும் சுன்னத்து ஜமாத்தார், மௌலானாக்கள்கூறும் எதையும் அப்படியே விழுங்கிவிடுகின்றார்கள். இந்த மௌலானாக்கள் தங்களைப்பின்பற்றாதவர்களையும், எதிர்த்துகேள்வி கேட்பவர்களையும், சந்தேகங்கொண்டு பகுத்தறிவை உபயோகிப்பவர்களையும், மௌலானாக்களின்கூற்றுக்களை ஆராயத்துணிபவர்களையும் ஜாதிப் பிரஷ்டம் செய்து விடுகின்றனர் இல்லை, லக்ஷக்கணக்கானவர்களைத் தீண்டாத ஜாதியினருடன் சேர்த்துவிட்டனர். ஹிந்துமத சம்பிரதாயப்படி தீண்டப்படாதபள்ளுபறையனும் ஹிந்துவே. ஆனால், இந்த மௌலானாக்களின் சம்பிரதாயப்படி இவர்கள் ஜாதிப் பிரஷ்டம் செய்தவர்களில் பெரும்பாலார்கள் 'காபிர்'கள் அதா

# மாரியம்மா!

(உறையூர் P. மாணிக்கம் பிள்ளை)

என் தாயே! உன்மேல் ஒன்று அல்ல பல சந்தேகங்கள் உண்டாகிக் கொண்டே இருக்கின்றன. பல தடவைகளில் உன்மீது உண்டாயிருக்கும் சந்தேகங்களை அந்தரங்கமாய்க்கேட்டும், அம்மா! நீ மௌனம் சாதித்து வருகின்றாய். அன்பார்ந்த என் மாரியம்மா! உன்மேலிருக்கும் என் சந்தேகங்களை இச்சிறு 'ஸாந்தி' பத்திரிகைமூலம் பகிரங்கமாய் உலகமறியச் செய்யப்போகிறேன். இதைக் கண்டு என் அம்மணீ! நீ என்மேல் கோபங்கொண்டுவிடாதே சீறிப்பாய்ந்திடாதே-அம்மை வார்த்திடாதே-என்னை சபித்திடாதே. என் தாயே! நான் இன்னும் விவாகமாகாத சிறுவன். நான் என்செய்வது. நீ எங்கள் தெய்வம் என்று நான் அறிவேன். நீ எல்லா தெய்வங்களைக்காட்டிலும் எவ்வளவோ மேன்மையானவள் என்பதையும் நான் அறிவேன். உன் வருகையைத் தெரிந்து கொண்டால் என்னசெய்கிறோம். எங்கள் திரேகம் எங்களை அறியாமலே படபடத்து வெடுவெடுத்து விடுகின்றது. எடுக்கின்றோம் ஓட்டம். எங்கே? அம்மா! உனக்கு பிரியமான வேப்பிலை கொண்டுவருவதற்காக. கொண்டுவருகின்றோம். அதை வீட்டின் மூலை-முடுக்கு-சந்து-பொந்து போன்ற இடங்களிலெல்லாம் சொருகி உன் வரவை எதிர்பார்த்து அடிபணிந்து நிற்கின்றோம். உனக்கு நாம் இடும் காணிக்கை எத்தனை? இவையெல்லாம் கவனித்தால், எந்த பகுத்தறிவுள்ளவன்தான் எங்கள் ஆத்தா மாரியம்மாவிடம் கொண்டுள்ள பக்தி, இல்லை என்று சொல்ல முடியும். எங்கள் மாரியம்மா பெற்றிருக்கும் மகிமையைப்பற்றி யார்தான் சிலாக்கிக்காமல் இருக்கமுடியும். அப்படி இருந்தும் உனக்கு என்மேல் சந்தேகம் ஏற்படுவதாயிருந்தால் அச்சந்தேகம் எப்படிப்பட்டதாகயிருக்க வேண்டும் என்பதை எங்கள் அம்மா அறிந்து கொள்வார்கள்.

## அது என்ன?

அம்மா! மாரியாயீ! நீ ஹிந்துக்களின் கடவுளல்லவா? அவர்கள் உன்னை எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்பதை நீ அறியாதவளா? உன் பெயரைக்கண்ட மாத்திரத்தில் உன் பக்தர்கள் பலவித காணிக்கைகளுடன் மிக்க மேதைமரியாதையுடன் அம்மா-அம்மணி-தாயே-ஆருயிரே-மாரியம்மா-மாரியாத்தா என்றெல்லாம் புகழ்ந்து அழைத்து நிற்கின்றார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தெரிந்தோ தெரியாமலோ ஒரு சில சிறு குற்றங்கள் செய்துவிட்டால் அம்மா! நீ அவர்கள் குற்றத்தைப்பொறுத்தருளவேண்டியிருக்க அந்தோ! அவர்களை என்ன பாடு படுத்துகின்றாய்! அதை உன்னுந்தோறும் எங்கள் உள்ளத்தில் உண்டாகும் வேதனையை என்னென்று உரைப்பது. அம்மணீ இச்சிறு பிழைகளையே பொருக்காத நீ உன் பரமவிரோதிகளை என்னதான் செய்யமாட்டாய். அதை நினைக்கும் போது தான் எங்களுக்கு அடங்காச் சிரிப்பை உண்டாக்குகின்றது.

## ஏன்?

உன்னை ஆதியில் வணங்கிவந்த அதே ஹிந்துக்கள் இப்போது முஸ்லிம்களாகவும்-கிறிஸ்துவர்களாகவும் திகழ்ந்து உன் பரமசத்துருக்களாயிருக்கிறார்கள். உன்னை அவர்கள் கண்டால் அபேசாய் விழுங்கிவிடுவோம் என்கிறார்கள். உன்னை எந்த வழியிலாகிலும் அழித்து ஒழித்துவிட ஆழக்குழி தோண்டி வருகின்றார்கள்.

ஏ! மாரியம்மா! எங்கே உன் தீரமும், வீரமும்? சாயபுகளையும்-கிறிஸ்துவர்களையும் கண்டால் பிடிக்கின்றாய் ஓட்டம். வெட்கம்-வெட்கம். நீ உண்மையான தெய்வீகத்தன்மையானவளாயிருந்தால் சாயபுகளையும்-கிறிஸ்துவர்களையும் ஏன் சபித்து சாம்பலாக்கக்கூடாது. உன் நாடாகிய பாரதநாட்டைவிட்டு ஏன் அவர்களை விரட்டிஅடிக்கக்கூடாது. இந்தியாவை ஏன் ஹிந்துமயமாக்கக்கூடாது. அதுமுடியாதென்றால்உன்பக்தர்கள் கூடல்லவா உன்னை எளனம் செய்து நகையாடுவார்கள். கடைசியாக உன்னை யார்தான் சிந்திப்பார்கள். அந்தோ! முடிவில் நீ ஒரு வெறுங் கல்லாய்த்தான் அழைக்கப் படுவாய். இது நிச்சயம். நிச்சயம்-நிச்சயம்.

---

6-ம் பக்கத் தொடர்ச்சி.

வது இஸ்லாமிய சகோதரத்துவத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டவர்கள். அந்தக்கோஷ்டியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டவர்கள். அவர்கள் இவர்களுடைய கோவில் (மசூதி) களுக்குள் நுழைந்துவிடவோ, இவர்களுடன்நின்று தெய்வப்பிரார்த்தனை செய்யவோகூடாது. மிஞ்சினால் மண்டை உடைந்துபோகும். கொலையும் செய்துவிடுவார்கள். பிரிட்டிஷ் ராஜ்ஜியமாகையால், இந்த மௌலானாக்களின் சட்டம் அமுலிலில்லை. இருந்தால் கொலைதான். இவர்களுடைய பெண்டுபிள்ளைகளும்,சொத்து சுதந்திரமனைத்தும்சூறையாடப்படும். காதியான்கள், அஹ்மதிகள் என்னும் (பல ஹைக்கோர்ட்டுகளின் தீர்ப்பின்படி தீவிர நோக்கமுள்ள ஆர்த்தடக்ஸ்-வைதிக) முஸ்லிம்கள் இவர்களின் கோவில்களுக்குள் கால் வைத்துவிடக்கூடாது. அப்படியே வஹாபிகள் என்னும் (அதிதீவிர வைதீக) முஸ்லிம்களும் தீண்டாத ஜாதியினராய் நடாத்தப்படுகின்றனர். ஷியாக்களென்னும் முஸ்லிம் ஜாதியார் முன்கூறிய அனைவரையும் ஜாதிப்பிரஷ்டர்கள் என்று மதிக்கின்றனர். தண்ணீர் கேட்டால் ஷியாக்கள் அதில் எச்சலை மறைவில் உமிழ்ந்து கலக்கிக்கொண்டுவந்து கொடுக்கின்றார்கள் என்று 'சுன்னி'கள் குறைகூறுகின்றனர். இவர்கள் பெண் கொடுத்தல் கொள்ளல் வைத்துக்கொள்ளுவதில்லை.

முஸ்லிம்காள்! இதுதானா இஸ்லாமிய சமத்துவம்! விஸ்வ சகோதரத்துவம்! ஹா!! ஹா!!! பலே பலே!

எம். தாஸ்.

# கிறிஸ்துவப் பெண்கள் பிசாசுகளே!

## பாபிகளே! அடிமைகளே!

### என்னே! கிறிஸ்துவப் பெண்கள் அடைந்த சுதந்திரம்.

G. பாரத குமாரி. (ரிஜிஸ்டர்)

(சென்ற எப்ரல்-மீ "ஸாந்தி"யில் வெளிவந்த 'கிறிஸ்துவப் பெண்கள் பாபிகளே!' என்றதின் தொடர்ச்சி.)

இதனால் விளங்குவதென்ன? ஸ்திரீ ஜாதியினர் என்றென்றும் பாபிகள் என்றும், பிசாசு குணம் படைத்தவர்கள் என்றும், அருவருக்கத் தக்கவர்கள் என்றும் விளங்குகின்றது.

பெர்னார்ட் அப்போஸ்தலர்,

"பிசாசின் கருவி ஸ்திரீ" என்றும்,

அப். பொனெ வென்ச்சர்,

"ஸ்திரீ எப்பொழுதும், கொட்டத் தயாராயுள்ள ஒரு தேள்" என்றும், "இவள் பூதத்தின் ஈட்டியாவாள்" என்றும்,

அப். ஸெய்ன்ட் ஸிப்ரியன்,

"ஸ்திரீயானவள் நம்முடைய ஆத்துமாவை அடிமைகொள்ள பிசாசு பிரயோகிக்கும் கருவி" என்றும்,

ஸெயின்ட் ஜெரோம்,

"ஸ்திரீ பைசாசத்தின் வெளி வாயில், தேளின் விஷம், அழிவு அநியாயத்திற்கு வழிகாட்டி" என்றும் கூறிப் போயிருக்கின்றார்கள். இவ்வளவு தானா!

ஸெயின்ட் ஜான் கிரிஸாஷ்டம் என்பவர்,

"ஸ்திரீ மூலமாகவே பிசாசு ஜயமடைந்தான். அவளாலேயே ஸ்வர்க்கம் இழக்கவேண்டியாயிற்று. சகல கொடிய ஜந்துக்களிலும் ஸ்திரீயே மகா ஆபத்தான பிராணி" என்று எழுதியிருக்கின்றார்.

"ஸ்திரீ பொய்யின் மகள்"
"நரக வாயில் காப்பவள்"
"சமாதனத்தின் விரோதி"
"இவளால் ஆதாம் ஸ்வர்க்கத்தை இழந்தார்"
என்றும் எழுதுகின்றார்.

மாபெரிய ஸெயின் கிரகரி (தி. கிரேட்) போப்பானவர்,

"ஸ்திரீ கொடிய விரியன் பாம்பின் விஷத்தையுடையவள்" என்றும், "மஹா கொடிய கவிகற்பித பறவை நாகத்தின் பொறாமையைப் படைத்தவள்" என்றும் சொல்லிவைத்திருக்கின்றார்.

மயிற்கூச்செடுக்காது, தங்களைப் பற்றி மேற் சொல்லப்பட்ட பெரிய பாதிரிகளும், போப் மார்களும், மதத் தலைவர்களும் சொல்லிப் போயுள்ள அபிப்பிராயங்களைச் சற்று, அறிவு படைத்த எந்தக் கிறிஸ்துவ சகோதரியும் உணர முடியுமா?

மிகப் பெரிய கிறிஸ்துவ சந்நியாசி யென்று கணிக்கப்பட்டு பூஜிக்கப் பட்டுவரும் கிறை ஸாஷ்டம் என்னும் மஹான்:—

"ஸ்திரீகள் அத்தியாவசியமான ஒரு தொல்லையாகவே அமைந்திருக்கிறார்கள். இயற்கையாய்த் தோன்றியிருக்கும் காமக் கருவியாகவும், அத்தியாவசியமான துரதிர்ஷ்டமாகவும், வீட்டுக்கு வேண்டிய நரகமாகவும், மரணத்தை உண்டாக்கக்கூடிய மோகமாகவும், வர்ணம் தீட்டப் பெற்ற தீமையாகவுமே காணப்படுகிறார்கள்" என்று எழுதிவைத் திருக்கின்றார்.

கிறிஸ்து மதத்தில் மிகமிகக் கேவலமான வேலைகளையல்லாமல், மற்றெவ்விதமான மத கைங்கரியத்தையும் பெண்மணிகள் செய்யக்கூடாதென்றே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதாவது, அவர்களை மனித சமூகத்தினின்றும் ஒதுக்கியே வைக்கப்பட்டிருந்தார்கள், என்றால் மிகையாகாது. ஸ்திரீகள் பகிரங்க ஸ்தலங்களில் வரவொட்டாமலும், விருந்துகளுக்கும் வேறு விசேஷங்களுக்கும் போகவொட்டாமலும் தடுக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் வீடுகளுக்குள்ளேயே மௌனமாயிருந்து கொண்டு, தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படியும் படியாயும், நெய்தல், பின்னல், சமைத்தல் ஆகிய தொழில்களையே கவனிக்கும்படியாயும் கட்டளையிடப்பட்டிருந்தார்கள். அந்த ஸ்திரீகள் எப்பொழுதேனும் வெளியில் செல்லவேண்டுமாயின், உச்சி முதல் உள்ளங்கால் வரையில் மூடப்பட்டே அனுப்பப்படுவார்கள். இப்படித்தான் புராதன காலத்துக் கிறிஸ்துவப் பெண்கள் நடத்தப்பட்டு வந்தார்கள்.

(தொடரும்)

"ஸாந்தி"

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா ரூ. | 0 | 8 | 0. |
| அயல் நாடுகளுக்கு ரூ. | 0 | 12 | 0. |

'ஸாந்தி' ஆபீஸ் பொன்மலை, திருச்சி.

'சமாதானம்'

(இது ஒரு மாத வெளியீடு.)

சமாதானத்தை நாடி உழைப்பது.

வருட சந்தா ரூ. 0—8—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 0—12—0.

"சமாதானம்" ஆபீஸ், பொன்மலை, திருச்சி.

S. குஞ்சிதம் B. A., L.T., 'அறியாமை' புத்தகம் 0 - 2 - 0.

'ஸாந்தி' ஆபீஸ், பொன்மலை திருச்சி.

Printed at the Sri Nilayam Press, Trichinopoly. Edited & Published by S. B. M. ISMAIL, Thalakudy, TRICHY.